**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. வல்வி ஓரி ஆண்ட மலை எது?
2. கருங்கூந்தலை இருண்ட கூந்தல் எனக் கூறும் உத்திமுறை எது?
3. 'ஆடிப்பாவை' என்பதன் பொருள் என்ன?
4. 'தொண்டி' என்பது எந்த வேந்தனின் துறைமுகப் பட்டினம்?
5. ஐங்குறுநூற்றின் பாலைத்திணைப் பாடல்களைப் பாடியவர் யார்?
6. கைகோளின் வகைகளைக் குறிப்பிடுக.
7. தொல்காப்பியர் குறிப்பிடும் மெல்ப்பாடுகள் எத்தனை வகைப்படும்?
8. திருமாலின் எத்தனை அவதாரச் செய்திகள் அகநானூற்றில் இடம்பெற்றுளளன?
9. உ.வே.சாமிநாதர் பத்துப்பாட்டு நூல்களை எந்த ஆண்டு அச்சு வடிவில் கொண்டு வந்தார்?
10. விறலியின் பாதம் எதைப்போன்று இருந்தது என நத்தத்தனார் கூறியுள்ளார்?
11. பெரிய வயிற்றை ஒத்த வெற்று அறையுடன் கூடிய யாழின் அடிப்பகுதிக்கு என்ன பெயர்?
12. தகடுரை ஆண்ட வள்ளவின் பெயர் என்ன?
13. எந்த மாதத்தில் நட்சத்திரம் வீழ்ந்தால் அரசனுக்குக் கேடு என்பர்?
14. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தினைப் பாடிய புலவர் யார்?
15. உன்னத்துப் பகைவன் என அழைக்கப்படுபவன் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. புன்னை மரத்தின் சிறப்பினை நற்றிணை எங்ஙனம் புலப்படுத்தியுள்ளது?
2. ஓரேர் உழவனாரின் பாடலில் வரும் உவமை நயத்தை விளக்குக.
3. களவன் பத்து உணர்த்தும் செய்திகளைக் கூறுக.
4. அகநானூற்றின் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுக.
5. சிறுபாணாற்றுப்படையில் வரும் விறலியின் வருணனையைக் குறிப்பிடுக.
6. நல்லியக்கோடனைப் பரிசிலர் புகழ்ந்த விதத்தினை எழுதுக.
7. வானவரம்பனின் ஆற்றலை விவரிக்க.
8. 'ஊன்துவை அடிசில்' என்ற பாட்டின் கருத்தைத் தெரிவிக்க.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நற்றிணைப் பாடல்களில் காணப்படும் படிமக் காட்சிகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகையில் உவமையால் பெயர் பெற்ற புலவர்களின் பாடல் நயத்தை ஆராய்க.

2. (அ) அகநானூற்றுப் பாடல்களில் காணலாகும் மெய்ப்பாடுகளைக் கட்டுரை வடிவில் விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) நல்லியக்கோடனின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைக்க.

3. (அ). புறநானூற்றில் கொடைமேம்பாடு குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள வருணனைகள் குறித்துக் கட்டுரைக்க.

***